திருவள்ளுவர் ஆண்டு 1979 கார்த்திகை 12
சென்னை, 27—11—48

வீச்சு
14



—புதுடில்லி "சங்கர்'ஸ் வீக்லி"யிலிருந்து.

ங்கர்'ஸ் வீக்லி", புதுடில்லியிலிருந்து வெளியாகின்ற சிறந்த கார்ட்டூன் வாரத்தாள். இந்த கார்ட்டூன் தழை நடத்துபவரும், இந்த இதழில், வாரந்தோறும் ற்கால அரசியல் சமுதாயப் பிரச்சினைகளைக் குறித்த ல் அற்புதமான கேலிச் சித்திரங்களைத் தீட்டிவருப ரும் சங்கர் என்னும் புனைபெயர் கொண்ட ஓர் தென் ந்தியர். அவருடைய இயற்பெயர் கே. எஸ். பிள்ளை ன்பது. 14-11-48ல் வெளியான சங்கர்ஸ் வீக்லி ல், வேகமாக வளர்ந்துவரும் ஹிந்தி ஏகாதிபத்திய வறிச் செயலைக் கண்டித்து எழுதப்பட்டுள்ள இந்தக் ர்ட்டூன் வெளியாகியிருக்கிறது. ஹிந்தி தெரியாத குதிகளை ஒரு பையனாக உருவகித்து, ஹிந்தி மொழி வறி மிகுந்த பாபு புருஷோத்தமதாஸ் தாண்டன் அவனை அழுத்திப்பிடிக்க, ஐக்கிய மாகாணம், மத்திய மாகாணம், பீகார் முதலிய இந்தி மாகாணக் காங்கிரஸ் தலைவர்கள் வலுக்கட்டாயமாக, பையன் வாயில் புனல் வைத்து (மண்ணெண்ணெய் ஊற்றுவதுபோல) ஹிந்தி "டானிக்"கை (!!) விழுங்கச் செய்யும் பலாத்காரச் செயலை அழகாகச் சித்தரித்திருக்கிறார் தோழர் சங்கர். ஹிந்தி வெறியர்களுக்கு இப்படத்தைப் பார்த்த பிறகாவது ஹிந்திமொழி ஏகாதிபத்திய வெறி தணியுமாக. ஹிந்தியைக் கட்டாயமாக்கியிருக்கும் நம் ஆளவந்தார்கள், தம் செயல் எவ்வளவு அருவருக்கத்தக்கது என்பதை உணர்வதற்கும் இப்படம் ஓர் தூண்டுகோலாயிருக்கட்டும்.

மலர் மாலை

சூட்டுகிறோம்!

ஆளவந்தார்களை நாம் பலமுறை தாக்கி இருக்கிறோம் அவர்கள் செயல் நாட்டு நலத்திற்குப் புறம்பானது என்று நாம் கருதிய காரணத்தால்! ஆனால், இம்முறை, அவர்களுக்குக் கண்டனத்தை அல்ல மலர் மாலையைப் பரிசாக அளிக்கிறோம்! இதோ, ஆளவந்தார்களுக்கு நாம் சூட்டும் இம் மலர்மாலையைத் தொடுததது, நாம்! ஆனால் இதில் தொடுக்கப்பட்டுள்ள மலர்கள் ஒவ்வொன்றும் மலர்ந்தது ஒவ்வொரு காங்கிரஸ் செடியில்! திராவிடர் கழகப் பூங்காவிலோ கம்யூனிஸ்ட் தோட்டத்திலோ மலர்ந்த மலர் ஒன்றுகூட இல்லை இம் மாலையில்! எனவே ஆளவந்தார்கள் அச்சமின்றி அணியலாம் இம் மலர்மாலையை! ஆளவந்தார்களே, யாம் மாலை சூட்டுகின்றோம், மகிழ்ச்சியுடன் அணிமின்!

* * * *

நாம் சூட்டும் மலர் மாலை

மலர் 1

பஞ்சத்தைக் கூவி அழைக்கிற மந்திரிகள்!

இந்திய உதவி மந்திரி ஸ்ரீ வல்லபாய் பட்டேல் பம்பாய் முதலாளிகள் கூட்டத்தில் பேசும்போது, முதலாளித்துவத்தை ஒழிக்கப் போவதில்லை என்றும், ஒழிக்கவும் கூடாது என்றும் கூறியுள்ளார். இவ்விதம் கூறிய ஸ்ரீ பட்டேல், முதலாளித்துவம் இருப்பதால் ஏற்படும் நன்மைகளையும், தீமைகளையும் விளக்கி, தீமையைவிட, நன்மை அதிகமாக இருக்கிறது என்று காட்டி இருப்பாரானால் சாலப் பொருத்தம் உடையதாய் இருந்திருக்கும். ஏனோ அவர் இவ்விதம் செய்யவில்லை. மக்களின் துன்பத்துக்கும் நாட்டின் கேட்டுக்குமாக உள்ள ஓர் முறையை உடனடியாகப் போக்குவதற்குப் பதிலாக, கொள்ளை இலாபப் பதுக்கல்காரர்களைத் தட்டிக்கொடுக்கும் முறையில் பேசியிருக்கும் ஸ்ரீ பட்டேலை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

ஸ்ரீ பட்டேல் நினைக்கிற கருத்தில் காரியங்கள் நடந்தால், வங்காளப் பஞ்சத்தைப்போல பல மடங்கு பெரிய பஞ்சங்கள் இந்நாட்டில் ஏற்படும். இதன் பயனாக நம் நாட்டுமக்களும் தற்போது சீன மக்கள் கிளர்ந்தெழுந்து நிற்பதைப்போல், இந்திய வரலாறு கண்டிராத அளவில் பெருங் கிளர்ச்சிகளைச் செய்யக் கூடிய நிலைமை ஏற்படுவது நிச்சயம்.

—"பிரசண்ட விகடன்" என்ற
தேசீயச் செடியிலிருந்து!

மலர் 2

பணம்தான் பாழாகிறது. பலன் ஏதுமில்லை

பிர்க்கா அபிவிருத்தி என்ற பெயரின் கீழ் சென்னை சர்க்கார் சில காரியங்கள் செய்துகொண்டிருக்கிறார்கள். இந்த இலாகாவை நிர்வகிக்கும் மந்திரிக்கும் அதில் வேலைபார்க்கும் சிப்பந்திகளுக்கும் அந்தத் திட்டத்தைப்பற்றி ஏதாவது தெரிந்திருக்கலாமோ, என்னவோ, பொது ஜனங்களுக்கு அதைப்பற்றி ஒன்றும் தெரியாது. ஆனால், ஒன்றுமட்டும் எல்லோருக்கும் தெரியும், பிர்க்கா அபிவிருத்திக்காக நிறைய பணம் செலவிடப்படுகிறது. ஆனால், அதை நிறைவேற்றி வைப்பதில் யாருக்காவது அக்கரை இருக்கிறதா வென்று அறியவிரும்புகிறோம். கிராமக் கைத்தொழில், குடிசைத்தொழில் ஆகியவைகளைப்பற்றிப் பேசுவது ஒரு 'பாஷனாய்' இருக்கிறதேயொழிய உண்மையில் அதில் யாருக்கும் சிரத்தை இல்லை. இந்த நிலைமையில் பிர்க்கா அபிவிருத்தி என்று செலவிடப்படும் பணம் அந்த இலாகாவிலுள்ள சிலருக்குப் பிழைப்பாய் இருக்கிறதேயொழிய வேறு எந்த அபிவிருத்திக்கும் உதவி செய்யவில்லை. ஒரு பிரயோசனமும் இல்லாமல் ஒரு இலாகா, அதற்காக ஒரு மந்திரி சிப்பந்திகள் ஆகியவற்றிற்காகச் செலவிடப்படும் பணம் வீண் விரயம். இந்த அநியாயமான விரயத்தை சர்க்கார் உடனே நிறுத்தவேண்டும்.

—"பாரத தேவி" என்னும்
காங்கிரஸ் செடியிலிருந்து!

மலர் 3

அரிசிப் பஞ்சம் வந்தது "காங்கிரஸ்" மந்திரிகளாலேயே!

இந்திய நாட்டை அன்னிய சர்க்கார் ஆண்டு வந்த வரையில் நம்முடைய துன்பங்கள் எல்லாவற்றிற்கும் அன்னிய சர்க்கார் மீதே பொறுப்புச் சுமத்தி வந்தோம். "பிரிட்டிஷ் ஆட்சி தொலைந்தால் எல்லாம் சரியாகிவிடும்" என்று சொல்லி வந்தோம்.

பிரிட்டிஷ் ஆட்சி ஒரு வழியாகத் தொலைந்தது; ஆனால் எல்லாம் சரியாய்ப் போகிற வழியாகக் காணப்படவில்லை.

எத்தனையோ துன்பங்கள் மக்களை வாட்டி வருகின்றன. அவற்றுக்கு யார் மேல் குற்றம் சாட்டுவது என்பதைப்பற்றி யோசிக்க வேண்டியிருக்கிறது.

சில துன்பங்களுக்கு உலகத்து அரசியல் சூழ் நிலையின் மீது குற்றம் சுமத்தலாம். சில கஷ்டங்களை யு. என் ஓ. சபையின் மீது தூக்கிப் போடலாம். வேறு சில தொல்லைகளுக்கு பாகிஸ்தான் பிரிவினையைக் காரணமாகக் குறிப்பிடலாம். சிலவற்றுக்கு அந்தப் பொல்லாத பண வீக்கத்தைக் காரணமாகச் சொல்லலாம். ரஸாக்கர் மீதும் கம்யூனிஸ்ட்கள் மீதும் சிற்சில கஷ்டங்களைச் சுமத்திப் பார்க்கலாம்.

ஆனல் இந்தச் சென்னை மாகாணத்து ஜனங்கள் தினம் தினம் அரைப்படி அரிசிக்கு ஆலாய்ப் பறக்க வேண்டியதாயிருக்கும் நிலைமைக்கு வேறு யார் மீதும் குற்றம் சொல்லிப் பயனில்லை. ஜப்பானிலே அமெரிக்கர் போட்ட அணுகுண்டைக்கூடக் காரணமாகச் சொல்வதற்கில்லை. வடகிழக்கு 'மான்ஸூன்' என்னும் பூதத்தின் பேரில் பழிபோடவும் முடியாது. ஏனெனில், இந்த வருஷத்தில் அந்த பூதம் 'ஸ்ட்ரைக்' செய்து விடாமல் ஏதோ முன்பின்னுக மழையைக் கொண்டு வந்து பொழிந்து கொண்டிருக்கிறது.

எனவே, சென்னை மாகாணத்தில் அரிசிப் பஞ்சத்தின் முழுப் பொறுப்பையும் நமது சென்னை மாகாண சர்க்கார், அதாவது சர்க்காரை நடத்தும் காங்கிரஸ் மந்திரிகள், மட்டுமே தாங்கியாக வேண்டும்.

—"கல்கி" என்ற பிரபல தேசீயச் செடியிலிருந்து!

மலர் 4

தலைமீதுள்ள ஆபத்தையும் அறிய முடியாத ஓமந்தூரார்!

பெருத்த கொந்தளிப்புக்குப் பின், நாட்டில் சற்று அமைதி தென்படும் இந்தச் சமயத்தில், மீண்டும் ராஷ்ட்ரீய சுயம் சேவா சங்கத்தைச் சட்ட பூர்வமாக்க வேண்டுமென்று கோல்வால்கார் தலைமையில் ஒரு சாரார் பலத்த முயற்சி செய்து வருகின்றனர்.

காந்திஜியைப் பறிகொடுத்த பின்பும் கூட ஹிந்து மதவெறிக்கு இந்தியாவில் இடமிருக்க முடியுமென்று இவர்கள் நம்பி, இது போன்ற முயற்சியில் இறங்கக் காரணம், ஒரு சில மத வெறியர்களுக்கு நாட்டு நிர்வாகத்தில் முக்கியமான இடம் இன்னும் இருந்து வருவதே யாகும். இந்தியாவின் மந்திரி சபையில் டாக்டர் சியாம் பிரசாத் முகர்ஜி இன்னும் செல்வாக்குடனேயே இருந்து வருகிறார். இன்றும் அவர் வீட்டில் ஹிந்து மகாசபைக் கொடி கம்பீரமாய்ப் பறந்து வருகிறது. இது எல்லாக் கட்சிகளுக்கும் நிர்வாகத்தில் பங்குண்டு என்று கூறித் தங்கள் பரந்த நோக்கை நிரூபிப்பதாகத் தலைவர்கள் கருதலாம். ஆனல் பரந்த மனப்பான்மைக்கும், ஏமாளித் தனத்திற்கும் நம் தலைவர்கள் வித்தியாசம் கண்டுகொள்ள முடியவில்லையோ என்று மக்கள் நினைக்கவும் இடம் கொடுக்கிறது. இதில் ஓரளவு உண்மை யில்லாமலும் போகவில்லை. மற்ற மாகாணங்களும் சம்மதித்தால் ஆர். எஸ். எஸ். மீதுள்ள தடையை நீக்கத் தன்னைப் பொருத்த வரையில் ஆட்க்ஷேபமில்லையென்று சமீபத்தில் நமது பிரதமர் ரெட்டியார் கூறினர். பொதுமக்களின் மனப்போக்கையும், தலைமீதுள்ள ஆபத்தையும் இவர் அறிந்து கொள்ளாதது வருந்தத்தக்கது.

—"காலச் சக்கரம்" என்ற கோயமுத்தூர் காங்கிரஸ் செடியிலிருந்து!

மலர் 5

நீதியும் நேர்மையும் தொலைந்தன, தொலைந்தன!

வெள்ளையர்கள் வெளியேறி நம் தலைவர்கள் ஆட்சிப் பீடம் ஏறியதிலிருந்து துரதிர்ஷ்டவசமாக நேர்மைப் பண்பு என்பது அடியோடு அழிந்துபோய், காங்கிரஸ் இயக்கத்தின் பரம்பரைத் தியாக சிந்தனை அளவுகோல்களுக்கு முற்றிலும் மாருக ஏராளமான அளவில் பொருள் சேர்த்துக்கொண்டு டாம்பீகமாக வாழும் நிலைமை ஏற்பட்டுவிட்டது. மேலே உள்ள இந்த அவல நிலை காங்கிரஸ் கட்டிடத்தின் அடித்தளத்திலே உலவுபவர்களிடையே லஞ்சம் என்பது தாராளமாக நடமாடுவதற்கான நிலைமையை உண்டாக்கிவிட்டது. பிரிட்டிஷாருக்குப் பதிலாக இன்று நாடாள்பவர்கள் அந்த பிரிட்டிஷாரின் இமிடேஷன்களாகவே இருக்கிறார்கள். அளவுக்கு மீறிய படாடோபம் டாம்பீகம் சுகபோகம் இவற்றிலேயே சுழல்கிறார்கள். மகாத்மா உயிருடன் இருந்தபோது எவ்வெவற்றை ஓய்வின்றிக் கண்டித்து வந்தாரோ அவற்றையே செய்துவருகிறார்கள்.

—'சுதந்த்ரா' என்னும் தேசீய ஆங்கிலச் செடியிலிருந்து!

(11–ம் பக்கம் பார்க்க)

விற்பனையாளர்கள் உடனே தேவை

நம் போர்வாளுக்கு பிரதிக்கு 12 அணு வீதம் முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் கீழ்க்கண்ட ஊர்களுக்கு உடனே தேவை:

ராசீபுரம், மன்னார்குடி, தஞ்சாவூர், மதுரை, விழுப்புரம், திருக்கழுக்குன்றம், திருத்துறைப் பூண்டி, போளூர், பண்ருட்டி, திருவண்ணாமலை, நீடாமங்கலம், திருவத்திபுரம் (N.A.), சோழவந்தான், சோழபுரம், பட்டுக்கோட்டை, திருப்பத்தூர் (Rd), வல்லம், வாடிப்பட்டி, குளித்தலை, கொழும்பு, பழனி, அம்பாசமுத்திரம், வாணியம்பாடி, விருதுநகர்,

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

"விரைவாகச் செய்தியைச் சொல்லுங்கள் அப்பா!"

"நம் குமார் விடுதலை ஆகிவிட்டான் கண்ணே!"

"உண்மையாகவா! உண்மையாகவா!"

"ஆமாம் அம்மா!"

"எப்போ அப்பா!"

"இன்று பிற்பகல்! இந்தா, இந்தப் பத்திரிகையில் பாரேன், விவரமாக இருக்கிறது!" என்று கூறி அன்று மாலை வெளியான தினசரி ஒன்றை அவளிடம் தந்தார்.

வேகமாக அதனை மனதிற்குள்ளாகவே படிக்க ஆரம்பித்தாள். "உன் வாயால் ஒரு தரம் அந்த சந்தோஷமான செய்தியை உரக்கப் படியேன், நான் கேட்டுப் பூரிக்கிறேன்!" என்றார் வையாபுரி. குமுதம் உரத்த குரலில் படிக்கத் தொடங்கினாள்.

கோபால் குமார் விடுதலை

ஜமீன்தார் கொலைவழக்கு தீர்ப்பு

சிங்காரநகர், நவ. 23—

பழத்தூர் ஜமீன்தார் கொலை வழக்கில் இன்று பிரதான நீதிபதி நீலகண்டன் தீர்ப்புக் கூறினார்.

சென்ற ஆண்டு மே மாதம் 1—ந் தேதி பழத்தூரில் விவசாயிகள் உரிமைப் போராட்டம் நடத்தியபோது ஜமீன்தார் ஜம்புலிங்கம் பிள்ளை கொலை செய்யப்பட்டார். அது சம்பந்தமாக தோழர்கள் குமாரும், கோபாலும் கைது செய்யப்பட்டார்கள்.

போலீஸ் இன்ஸ்பெக்டர் பூர்ணலிங்கம் பல நாட்கள் கஷ்டப்பட்டு உண்மையைக் கண்டுபிடித்தார். ஜமீன்தாரிடம் கணக்கெழுதிக் கொண்டிருந்தவரும், பழத்தூர் பிரமுகருமான தோழர் கோட்டீஸ்வர அய்யர், பணத்தாசையினால் ஜமீன்தாரைக் கொலை செய்துவிட்ட செய்தியைக் காளிமுத்துவின் மூலமாக இன்ஸ்பெக்டர் கேள்விப்பட்டார். காளிமுத்துவை அப்ரூவராகப் போட்டு வழக்கு நடந்துவந்தது.

அதன் தீர்ப்பு இன்று சொல்லப்பட்டது. தீர்ப்பின்படி, குமாரும் கோபாலும் விடுதலை அடைந்தனர். அப்ரூவர் காளிமுத்துவும் விடுதலை அடைந்தான். கொலைகாரன்கோட்டீஸ்வர அய்யர் ஆயுள் தண்டனை பெற்றான்.

(ந. நி.)

சிறிது நேரம் தந்தையும் மகளும் மௌனமாக இருந்தார்கள்.

"அப்பா!"

"ஏன் குமுதம்"

"என் மனதில் இருப்பதை இப்பொழுது கூறினால், தாங்கள் தற்பொழுது அடையும் மகிழ்ச்சி குன்றிவிடாதே?"

"என்ன அம்மா, விநோதமான கேள்வியாக இருக்கிறது! என்ன கேட்கப் போகிறாய், சொல்லேன்!" என்று வையாபுரி சொல்லிவிட்டு தன் மகளின் முகத்தைப் பார்த்தார். குமுதம் சிறிது நேரம் எப்படிக் கூறுவதென்று புரியாமல் பேசாமல் இருந்தாள். பிறகு தைரியம் கொண்டு பேச ஆரம்பித்தாள்.

"அப்பா! இந்தச் செய்தியை வாசிப்பதற்கு முன்பு நான் கைம்பெண்!......"

"இப்பொழுது ?"

"கன்னி! ஆம் அப்பா! கன்னிதான்! இன்னும் எனக்கு மணமாகவில்லை! அப்பா!........"

வையாபுரி மௌனத்தில் ஆழ்ந்தார். சிறிது நேரம் சென்று பேச ஆரம்பித்தார்.

"குமுதம்! நீ கவலைப்படாதே குழந்தாய்! நான் மனிதன்தான்! எனக்கும் உணர்ச்சிகளின் தன்மையை அறியும் அறிவு இருக்கிறது..."

"அப்பா! கோபமாகவா பேசுகிறீர் ?"

"இல்லை அம்மா! உணர்ச்சியின் மிகுதியினால் பேசுகிறேன், எனக்கு ஏன் அம்மா கோபம் வரப்போகிறது? கோபம் ஒரு முறை வந்துதான், உன் வாழ்க்கையைப் பாலைவன மாக்கினேனே—; பாலைவனம், நந்தவனமாக மாறப்போகும் நேரத்தில், கோபமா வரும்?... குமுதம்! சமுதாயம் பழிக்குமே என்று ஆரம்பத்தில் நினைத்தேன்! உற்றார் உறவினர்கள் கண்டிப்பார்களே என்று அஞ்சினேன்! இந்த மூன்று மாதங்களில் நீ பட்ட கஷ்டம், வடித்த கண்ணீர் இவற்றைப் பார்த்துப் பார்த்து என் உள்ளம் புண்ணாகியது! சேற்றில் செந்தாமரை பூப்பதுபோல, புண்ணான என் உள்ளத்தில் புரட்சி மலர்ந்தது!......உன் மனதை நான் நன்கறிவேன்! ஆனால் குமார் இதற்கு இசையவேண்டுமே, அம்மா!"

"அப்பா! அவர் சீர்திருத்தக்காரர்! புரட்சி மனப்பான்மை கொண்ட கலைஞர்! என்னை அவர் உயிரென நேசிப்பவர்......"

"சரி அம்மா! மிகுந்த மகிழ்ச்சி!" என்று கூறிவிட்டு, வீட்டினுள் சென்றார். அவளும் சென்றாள். அறையிலிருந்த தன் காதலன் குமாரின் புகைப்படத்தை எடுத்துக்கொண்டு மகிழ்ச்சி கூத்தாடும் உள்ளத்தோடு திரும்பவும் பூஞ்சோலையினுள் புகுந்தாள்! தன்னிரு கண்களால் குமாரைப் பார்த்தாள்!

"பைந்தமிழைச் சீராக்க
கைம்மை என்னும் சொல் நீக்கப்
பறந்துவாடி அழகிய மயிலே!"

என்று குமார் தன்னைப்பார்த்து இருகை நீட்டி அழைத்த வண்ணம் பாடுவதாக அவளுக்குத் தோன்றியது! புகைப்படத்தைக் கண்களில் ஒற்றிக்கொண்டாள், மார்பில் அணைத்துக் கொண்டு ஆனந்தத்தோடு பாடினாள். தோட்டத்திலிருந்த மலர்களைக் கொய்து கூந்தலில் சூட்டிக் கொண்டாள்!

கன்னி குமுதத்தின் உடலில் இன்ப ஊற்று கசிந்தது. தன் அத்தானைத் தழுவி மகிழ அவள் கைகள் துடித்தன! குமாருக்காக அவள் செவ்விய இதழ்களில் தேன்கசிந்தது! தென்றல் எனும் கொடிய புலி அழகியின்மேல் சீறிச் சீறிப் பாய்ந்தது!

"நான் தனித்திருக்கையில் புலிபோலச் சீறும் தென்றலே! என் ஆசை அத்தான் வரட்டும் சொல்கிறேன்!" என்று குமுதம் கோபம் கொண்டவளைப் போல கூறிக்கொண்டே வீட்டிற்குள் சென்றாள்.

சிறிது நேரத்தில் தன்னை நன்றாக அலங்கரித்துக்கொண்டு, தன் தந்தைக்குக் காபி எடுத்துச்சென்றாள்! அவள் நெற்றியில் குங்குமமும், கரிய நீண்ட கூந்தலில் மலர் செண்டும் அழகுக்கு அழகு செய்வதைக் கண்ட வைத்தியர் வையாபுரி ஒரு பெருமூச்சு விட்டு, பிறகு ஆறுதலும் பூரிப்புமடைந்தார்!

(தொடரும்)

தேசபக்தர்கள்

துவக்கிய

லிமிடெட் கம்பெனி!

கம்பெனி ப்ராஸ்பெக்டஸ்

பெயர்: தேசபக்தன் அண்டு கம்பெனி லிமிடெட்

இடம்: சென்னை சர்க்கார் காரியாலயம்

அங்கீகரிக்கப்பட்ட மூலதனம்: மந்திரி பதவி

செலுத்தப்பட்ட மூலதனம்: எம். எல். ஏ. பதவி [எம். எல். சி. க்கள் உட்பட]

மேனேஜிங் டைரக்டர்கள்: சட்டசபை காங்கிரஸ் உறுப்பினர்கள்

தொடங்கப்படும் தொழில்கள்: கட்டுப்பாடு செய்யப்பட்டுள்ள பொருள்களின் உற்பத்தி, விநியோகம் முதலியவற்றிற்கு லைசென்சுகள், பெர்மிட்டுகள் வாங்கிக் கொடுப்பது. சிபார்சுகள் செய்வது. நண்பர்கள், தெரிந்தவர்கள், தெரியாதவர்கள், உறவினர்கள், அல்லாதவர்கள், அனைவருக்கும் தக்க "கமிஷன்" மீது உத்தியோகம், சலுகை, வேலைமாற்றம், இடமாற்றம் ஆகியவற்றை வாங்கிக் கொடுப்பது. இன்னும் இவற்றிற்கு அனுசரணையான உப தொழில்களையும் புரிவது.

லாபம்: ஏராளம்

கணக்குத் தணிக்கையாளர்கள்: காங்கிரஸ் ஏடுகள்

வழக்கறிஞர்கள்: ஆகஸ்டு தியாகிகள்.

பங்குகள் விற்பனை முடியும் காலம்: 1951 [டில்லி மேலிடம் அனுமதி தந்தால் காலம் மேலும் நீட்டிக்கப்படும்.]

போர்வாள் துணையாசிரியர் இந்த விவரங்கள் பொறிக்கப்பட்ட துண்டுத்தாள் ஒன்றை நம்மிடம் கொடுத்துவிட்டு சிரித்தார். நமக்கோ ஒன்றும் புரியவில்லை, திகைத்தோம். "எடிடர் சார், இது ஒரு விளம்பரம். என் நண்பர் ஒருவர் ஆகஸ்டு தியாகி, காங்கிரஸ் எம். எல். ஏ., இதனை நம் பத்திரிகையில் போட வேண்டுமென வற்புறுத்துகிறார். இந்த வாரம் பத்திரிகையில் இடம் இருக்குமா?"—இதுபோலக்கேட்டுவிட்டு துணையாசிரியர் மீண்டும் தன் சிரிப்பை முழக்கலாயினார். நமக்கோ திகைப்பு வளரலாயிற்று, குறையவில்லை. "தேசபக்தன் கம்பெனி—எம். எல். ஏ—சட்டசபை—சர்க்கார் மாளிகை—பெர்மிட் லைசென்சு வாங்கித் தருதல்—கமிஷன் வியாபாரம்......இதென்ன தோழரே உம் விருப்பம்போல் ஏதேதோ எழுதியிருக்கிறீர், கேட்டால் விளம்பரம் என்கிறீர், விளக்கச் சொல்லுமய்யா சொல்லும்" என்று கொஞ்சம் கண்டிப்பாகவே கூறினோம். துணையாசிரியர் மேலும் சிரித்துக்கொண்டே சொன்னார்: "அப்படின்னா இந்த வாரம் இடம் இருக்காதா சார்! பேஜ் மேக் அப் முடிந்து எல்லா பாரங்களும் இப்போஸ்கூட செய்தாச்சின்னு போர்மேன் சொல்றாரே அது மெய்தானா!"

"அது மெய்யோ பொய்யோ அப்புறம் பார்ப்போம் தோழரே, முதலிலே சங்கதி என்ன அதைச் சொல்லும்."

"சங்கதியா! எல்லா சங்கதியும் தான் இந்தத் தாளிலேயே இருக்கிறதே"

"இருப்பது புரியவில்லையே."

"ஓஹோ! என் எழுத்து புரியவில்லை என்கிறீர்களா! இப்படிக் கொடுங்கள் படித்துக் காட்டுகிறேன்......"

"அட சட்! எழுத்தல்ல புரியாதது, கருத்து! கருத்தைச் சொன்னால் என்ன உமக்கு ஜன்னியா பிறந்துவிடும், சொல்லுமய்யா சொல்லும்."

கருத்தைச் சொல்லும் என்று நாம் கூறினோமே தவிர, "சப்-எடிடர்", கருத்தைக் கூறும் கடமையை மேற்கொள்ளவில்லை, தன் கோட் பாக்கெட்டில் கையை நுழைத்துத் துழவி எடுத்து, உருட்டிச் சுருட்டி பொட்டலமாக்கி வைக்கப்பட்டிருந்த "பாரததேவி" ஏடு ஒன்றை மேஜைமீது அகல விரித்து அழகுற வைத்து இதோ இந்த இடத்தைப் பாருங்கள் என்று ஓர் இடத்தைச் சுட்டிக் காட்டினார். பார்த்தோம். **கடற்காற்று** என்று பொறிக்கப்பட்டிருந்தது. நான் கேட்டதென்ன நீர் கொடுத்ததென்ன என்று கேட்கும் பாவனையாக துணையாசிரியரை ஏற இறங்கப் பார்த்தோம். அவர் "அதற்குத்தான் பதில் இது" என்று சொல்வது போல மறுபடியும் தன் சுட்டுவிரலை அந்தக் கடற்காற்றுப் பக்கமே ஆட்டினார். கடல்காற்றுப் பகுதியில் "பாரததேவி" தீட்டியிருந்த திருவாசகத்தைப் படித்த பிறகு சப் எடிடர் செய்த குறும்பு முழுவதும் நமக்குப் பளிச்சென விளங்கிவிட்டது, கடகடவெனச் சிரித்துவிட்டோம். **பாரததேவி** எழுதி இருக்கிறது:—

"காங்கிரஸ் என்ற பெயரில் சுயநல வேட்டை எவ்வளவு மும்முரமாக நடக்கிறது என்பதைப்பற்றிப் **பல தடவைகளில்** குறிப்பிட்டிருக்கிறோம். பல காங்கிரஸ்காரர்கள் மந்திரிகளைப் பேட்டி காணுவதையே ஒரு தொழிலாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். **வக்கீல்கள் பீஸ் வாங்கிக்கொள்வதைப் போல் இவர்களும் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள்!** பர்மிட் வாங்கிக் கொடுப்பதற்கு எவ்வளவு, லைசென்ஸ் வாங்கிக் கொடுப்பதற்கு எவ்வளவு, மந்திரியிடம் நேரில் சென்று மனுக் கொடுப்பதற்கு எவ்வளவு என்று ரகவாரியாக பீஸ் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு ஜில்லாவிலும் இதற்கென்றே சிலர் இருக்கிறார்கள். இவர்களின் ஏஜண்டுகள் ஜில்லாவின் பல பாகங்களிலும் இருக்கிறார்கள். **லிமிடெட் கம்பெனி வியாபாரம்போல வெகு ஜோராக இந்தத் தொழில் நடந்துகொண்டிருக்கிறது.**"

"**பாரததேவி**" இவ்வளவு பச்சையாக எழுதி இருக்கும்போது போர்வாள் சப் எடிடர் கிண்டல்

காகிதத்தீட்டியதிலே வியப்பென்ன இருக்கிறது? "பாரததேவி," நீளமான வாக்கியங்களாலே, அழகான வார்த்தை அமைப்புகளாலே, தீட்டிக் காட்டியதைத்தான், போர்வாள் துணையாசிரியர், கம்பெனி விளம்பரம் என்ற வடிவத்திலே எழுதிக் காட்டியிருக்கிறார். வேறுபாடு, விஷயத்தைக்கூறும் முறையிலேதான் இருக்கிறதே தவிர, கூறப்பட்ட விஷயம், இரண்டும் ஒன்றுதான்! பாரததேவி கட்டுரை வடிவத்திலே தருகிறது சட்டசபை உறுப்பினர்களின் சாகசத்தை! நம் துணையாசிரியர் விளம்பர வடிவத்திலே தந்திருக்கிறார் அதே "சேதி"யை! வேற்றுமை, இதுதவிர வேறில்லை!

லிமிடெட் கம்பெனி வியாபாரம் போல நடந்துகொண்டிருக்கிறதாம் தொழில்—வெட்கம் மானம் ரோஷமின்றி எழுதுகிறது "பாரத தேவி." இந்தத் தொழில் இப்படி நடைபெறுகிறது என்றால், இந்தத் தொழில் புரியும் எம். எல். ஏக்களுக்கு ஓட்டுப் போடுங்கள் என்று ஓயாமல் குரல் எழுப்பிய உத்தமிதானே இந்தத் தேவி! இந்தத் "தேவி," யார் யாரை சட்டசபைக்கு அனுப்புங்கள் என்று தேர்தல் காலத்தில் பிரசாரம் செய்தாளோ அவர்களைத்தானே மக்கள் சட்டசபைக்கு அனுப்வியிருக்கிறார்கள்—வேறு கட்சியினரை அல்லவே! ஆகவே இந்த எம். எல். ஏக்கள் இப்படி நடந்துகொள்கிறார்கள் என்றால் இப்படிப் பட்டவர்களை சட்டசபைக்கு அனுப்பும்படி நாட்டு மக்களுக்கு சிபார்சு செய்தோமே என்ற வெட்கம் இருக்க வேண்டாமா **பாரததேவிக்கு**? நாடு, இத்தகு நிலைக்கு, தாழ்த்தப்பட்டது தன்னாலேயும்தான் என்பதை எண்ணி துக்கப்படவேண்டாமா இந்த ஆரிய ஏடு? பர்மிட் வாங்கிக் கொடுப்பதற்கு எவ்வளவு, லைசென்ஸ் வாங்கிக்கொடுப்பதற்கு எவ்வளவு, மந்திரியிடம் நேரில்மனுக் கொடுப்பதற்கு எவ்வளவு என்று ரகவாரியாக பீஸ் வாங்குகிறார்கள் எம்.எல்.ஏக்கள், என்று எழுதுகிற இந்த ஏடு, இப்படிப்பட்ட எம்.எல், ஏக்களை சட்டசபைக்கு அனுப்பி வைத்த பாவத்திற்காக மக்கள் மன்றத்திலேவந்து மன்னிப்புக் கேட்கவேண்டாமா? இந்தத் துர்ப்பாக்கியமான நிகழ்ச்சிகளுக்கும் தனக்கும் அடியோடு தொடர்பே இல்லாததுபோல எழுதுகிறதே இந்த ஏடு, இது நியாயந்தானா? கண்ணியமுள்ள கனவான் ஒருவர் செய்யக்கூடிய காரியமா இது? "தேவி", தூய உள்ளமும் நேர்மையான நடத்தையும் சிறந்த பண்பாடும் செவ்விய ஒழுக்கமும் உடையவளாய் இருந்தால் இப்படிப்பட்டவர்களை ஏற்றியும் போற்றியும் துதித்தும் தோத்தரித்தும் இதுவரைதான் எழுதியது தவறு, குற்றம், பாதகம், என்று மனந்திறந்து கூறவேண்டாமா? கூறிற்றா தேவி? கூறுமா இனியேனும்?

தேசபக்தர்கள் லிமிடெட் கம்பெனி வைத்திருக்கிறார்கள்! 'பீஸ்' வாங்கிக்கொண்டு லைசென்ஸ் வாங்கித் தருகிறார்கள்! வக்கீல்களைப்போல ரகவாரியாக பணம் பெறுகிறார்கள்! இன்னின்ன லைசென்சுக்கு இவ்வளவு இவ்வளவு கமிஷன் என்று வாங்குகிறார்கள்! என்றெல்லாம் எழுதுகிறதே "தேவி," எந்த தேசபக்தரும் இது பொய் என்றோ புனைந்துரை என்றோ, பொறாமையினால் உரைக்கப்படுவது பொச்சரிப்பால் புகலப்படுவது என்றோகூட இன்றுவரை ஒருமறுப்பும் தரக்காணோமே! ஆக்வே தேவி கூறுவது மெய் என்றுதானே ஆகிறது!

லிமிடெட் கம்பெனி வைத்திருக்கிறார்கள் தேசபக்தர்கள் என்று சொன்னதோடு நிற்கவில்லை தேவி, இது ரகசிய சமாசாம் அல்ல ஊர் அறிந்த விஷயம் என்று வேறு சொல்கிறது! **"சட்டசபை மெம்பர் பதவியை உபயோகித்துக் கொண்டு எவ்வளவு காங்கிரஸ்காரர்கள் கேவலமான வழியில் பணம் சம்பாதிக்கிறார்கள் என்பது ஊர் அறிந்த விஷயம்!"** ஊர் அறிந்த விஷயமாம் காங்கிரஸ் எம். எல். ஏ. க்களின் நாணயம், பாரததேவி வெளிப்படையாக எழுதுகிறது, என்றாலும் எம். எல். ஏ. க்கள் எவருக்கும் இன்றுவரை ரோஷம் பிறந்ததாகத் தெரியவில்லை, இது தவறு என்று மறுப்பு வழங்கியதாகவும் தெரியவில்லை! ஏதோ இரண்டொரு எம். எல். ஏ.க்கள் தங்களுக்குக் கிடைத்த செல்வாக்கைப் பயன்படுத்திக் கொண்டு தவறாக நடந்துகொண்டார்கள், இரண்டொருவர் நடத்தை எல்லோரையும் பாதிக்காது என்று சொல்லி மன ஆறுதல் பெறுவோம் என்று பார்த்தால் அதற்கும் வழி இல்லை! ஏனெனில் இப்படிப்பட்ட வழுக்கி விழுந்த எம். எல். ஏ. க்கள் சிலர் அல்ல பலர் என்கிறது பாரததேவி! பாரததேவி கூறுவது பொய்யாக இருக்கமுடியாது! பாரததேவியும் அந்த எம். எல். ஏக்களும் ஒரே குடும்பம்! தேசபக்த குடும்பம்! இன்று, ஏதோ தேவி சோஷலிஸ்ட் பவுடரை தன் முகத்திலே பூசிக்கொண்டிருந்தாலும், வருடக்கணக்காக, குழந்தைப் பருவத்திலிருந்து தேவி, பூசிவந்தது காங்கிரஸ் மஞ்சளைத்தான்! மஞ்சளைப் பூசிப் பூசி தேவியின் முகமே மஞ்சள் நிறம் பெற்றுவிட்டது. அந்த மஞ்சள் நிறத்தை இந்த சோஷலிஸ்ட் பவுடர்கூட மறைக்கமுடியவில்லை! தேவியும் தேசபக்தர்களும் ஒரே குடும்பம் என்பதை அழகுற விளக்கிக்கொண்டிருக்கிறது அந்த மஞ்சள் நிறம்!

"தேவி"யின் வாசகப்படி, லிமிடெட் கம்பெனியில் ஈடுபட்டிருக்கும் தேசபக்தர்களோ **பலர்!** அவர்கள் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் சேதியோ **ஊர் அறிந்த விஷயம்!** ஊர் அறிந்த விஷயம் என்றாலும் இதற்கு ஆதாரம் கிடையாது என்று சொல்லித் தப்பித்துக்கொள்ளப் பார்க்கலாம் சில எம். எல். ஏக்கள்—அதற்கும் இடம் வைக்கவில்லை "தேவி"! தேசபக்தர்கள் இப்படி நடந்துகொள்ளுகிறார்கள் என்பதை ருஜுப்பிக்கத் தயார் என்று எக்காளமிடுகிறாள்! எக்காளமிடுவதோடில்லை, ஆளவந்தார்களை அறைகூவி அழைக்கிறாள் தன் குற்றச்

மூல வியாதிகளுக்கு

"யௌவன பிராஷ்"

(கருணைக் கிழங்கு லேகியம்)

ஆபரேஷன் பயன்தராத மூல முளைகள், ரத்தம், சீழ் வடிதல், குத்துவலி, மலபந்தம், வாய்வு, பவுத்திரக் கட்டிகள், 3 வேளை மருந்தில் உபத்திரவங்கள் தணிந்து, சுகம் காணலாம். 12 நாள் யௌவன பிராஷ் ரூ 3. 12 நாள் நாகபஸ்பம் ரூ. 2.

சரஸ்வதி வைத்தியசாலை

பழனி S. I.

சாட்டு பொய் என்று அவர்கள் எண்ணிஞல், தேசபக்த எம். எல். ஏ. க்களின் பொருளாதார நிலைமையை விசாரித்துப் பார்க்கட்டும் என்று!

"அதிகாரம் உள்ளவர்கள், சட்ட சபை மெம்பர்களின் பொருளாதார நிலைமையைப்பற்றி ஒரு விசாரணை நடத்தட்டும். அசெம்பிளி மெம்பர்களாகும் நிலத்தன்று அவர்களுடைய நிலைமை என்ன? இன்று அவர்கள் நிலைமை என்ன? மூன்று வருஷங்களுக்குள் அவர்களுக்கு இவ்வளவு பணம் எப்படிக் கிடைத்தது? அவர்கள் ஏதாவது தொழில் செய்தார்களா? அதற்கு கணக்கு இருக்கிறதா? இல்லாவிட்டால் எப்படி இவ்வளவு வசதி ஏற்பட்டது? மூன்று வருஷங்களுக்கு முன்பு ரயிலில் மூன்றுவது வகுப்பில் பிரயாணம் செய்வதற்குக்கூட வசதி இல்லாமல் இருந்தவர்கள் இன்று அலட்சியமாக எப்படி முதல் வகுப்பில்கூட போக முடிகிறது? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்ல முடியுமா?"

இவ்வளவு கேள்விகளையும் கேட்டுவிட்டு, "பாரத தேவி", ஒரே ஒரு பதிலை, அற்புதமான பதிலை, அழகான பதிலை, ஆணித்தரமான பதிலை, சுருக்கமான—ஆனால் நாணயமுள்ளவர்கள் உள்ளத்தையெல்லாம் சுளீர் என்று தாக்கக்கூடிய பதிலை, இந்தக் கேள்விகட்கெல்லாம் விடையாகத் தந்திருக்கிறது..

"அவர்களுக்கு, சட்ட சபை மெம்பர் பதவி பண வருமானத்திற்கு, மற்றுத ஊற்றாக இருந்துகொண்டிருக்கிறது."

நாட்டு மக்கள், நாட்டிலே உள்ள நானாவிதமான கேட்டினைக் களைவதற்கான பணி புரிவார்கள் என்ற நம்பிக்கைமீது, இந்த தேசபக்தர்களை, சட்டசபைக்குத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். இவர்களோ, சட்டசபை மெம்பர் பதவியை, தங்கள் சொந்த வருமானத்திற்குரிய பண ஊற்றாகக் கொண்டிருக்கிறார்கள்!

ஆஸ்பத்திரி இல்லாத ஊருக்கு ஆஸ்பத்திரி, கல்லூரி இல்லாத ஜில்லாவட்டத்திற்குக் கல்லூரி, சாலைகள் அற்ற தாலுகாவில் நெடுஞ்சாலைகள், உணவின்றித் தவிக்கும் மக்களுக்கு உணவு, உடையின்றி வாடும் ஏழைகட்கு உடை, வீடின்றி தவிப்பவர்க்கு வீடு, என்று இந்த முறையிலே திட்டமிட்டுப் பணி புரிய வேண்டும் எம்.எல்.ஏ.க்கள். அதற்காகத்தான் அவர்கள் சட்ட சபைக்கு வந்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் செய்வதோ ரகவாரியாக "பீஸ்" வாங்கிக்கொண்டு லைசென்ஸ் வாங்கித்தரும் கமிஷன் வியாபாரம்!

மக்கள் பசி பசி என்று பதைக்கிறார்கள்—இந்த தேச பக்தர்கள் பணம் பணம் என்று அலைகிறார்கள்!

மக்கள் வேலை தேடித் தேடித் திரிகிறார்கள், இவர்களோ மந்திரிகளை நாடி நாடி ஓடிக்கொண்டிருக்கிறார்கள்!

மக்கள் அரைபடி அரிசிக்கு ஆலாய்ப் பறக்கிறார்கள், அதற்கொருகண்ட்ரோலா என்று அங்கம் துடிக்கிறார்கள், ஆனால் இந்தத் தேசபக்தர்களோ அதுபற்றிய சிந்தனை அணுவுமின்றி, பெர்மிட்டு லைசென்சு பெர்மிட்டு லைசென்சு என்று ஜெபமாலை உருட்டுகிறார்கள்!

வானத்தை அண்ணாந்து பார்த்துப் பார்த்து மழைமுகம் காணாது தம் முகம் வாடும் உழவர்கள் ஒரு புறமும், தறிக் குழியைக் குனிந்து பார்த்துப் பார்த்து இதுவே நம் வாழ்க்கைக்கு சவக்குழியாயிற்றே—இத்தொழிலில் இரண்டணாகாசும் சம்பாதிக்க முடியவில்லையே என்று ஏங்கி மனமழியும் நெசவுத் தொழிலாளர் மற்றோர் புறமும், மதுவிலக்கு என்று சொல்லி மடக்குத் தெரிந்த ஒரே ஒரு தொழிலை விலக்கிவிட்டனரே சர்க்கார்—இனி என்ன செய்வோம், எத்தொழில் புரிவோம்; எவ்வண்ணம் வாழ்வோம் என்று நெஞ்சுருகி நைந்துருகும் மாஜி மரமேறிகள் இன்னோர் புறமும் சாவாது செத்து, வாழாது வாழ்ந்து கொண்டிருக்கின்றனர், சாகாத பிணங்களாக! ஆனால் இந்த காந்திபக்தர்கள் அவர்களுடைய சிதைந்த வாழ்வைச் செம்மைப் படுத்துவது எப்படி என்பதைப் பற்றிய கவலையற்று தங்கள் "லிமிடெட் கம்பெனி" தொழிலை, பாரத தேவியின் வாசகப்படி கூறுவதானல், வெகு ஜோராக நடத்திக்கொண்டிருக்கிறார்கள்!

"நாம் கண்ணீர் விட்டு வளர்த்த காங்கிரஸ் சுயநல சொரூபிகளின் மாய வலையிலே சிக்கி இப்படி சிறுகச் சிறுகச் சாகிறதே" என்று மனமுடைகிறார் தலைவர் திரு. வி. க. "அந்தோ! இத்தகு நிலைக்கு வந்ததா காங்கிரஸ்! என் இளமை முழுவதையும் அர்ப்பணித்தேனே இந்தக் காங்கிரஸ் இயக்கத்தின் வளர்ச்சிக்கு!" என்று வேதனைப் படுகிறார் மாவீரர் பெரியார். "மகத்தான காங்கிரஸ் இயக்கமே! நீ இவ்வளவுக்கா தாழ்ந்து தணிந்து விட்டாய்!" என்று கண்ணீர் சொரிகின்றன மக்கள் கண்கள்.

ஆனல் அந்த தேசபக்தர்களுக்கு மக்கள் சிந்தும் கண்ணீரைப்பற்றி என்ன கவலை! அவர்களுக்குத்தான் அந்த ஆரிய ஏடு "பாரத தேவி" கூறுவதுபோலவற்றாதபண ஊற்று போன்ற சட்டசபை உறுப்பினர் பதவி கிடைத்துவிட்டதே!

* * *

தேசபக்தர்கள் துவக்கியுள்ள இந்த லிமிடெட் கம்பெனியைக்

(10- பக்கம் பார்க்க)

பெரியாருக்குப் பாராட்டு!

பெரியார் என்ற பெயரைக் கேட்டாலே அஞ்சி நடுங்குகிறார்கள் சென்னை அமைச்சர்கள்! ஆனால் அவர்களையும் அறியாமலே அவர் வகுத்துக் கொடுத்த புரட்சிப்பாதையில் அடிக்கடி நடந்துவிடுகிறார்கள் அதே அமைச்சர்கள்! இரண்டு கிழமைகளுக்கு முன்னால் பிறநாட்டுக் கலாசாரம் நம் நாட்டுப் பள்ளிகளில் படையெடுப்பதை அதி தீவிரமாக எதிர்த்து அற்புதமான முறையில் மிக அழகாகச் சொற்பொழிவாற்றிய அமைச்சர் அவினாசியாரின் போக்கை எடுத்துக் காட்டியிருந்தோம்; இதோ மற்றுமோர் அமைச்சர் நமது பாதையில் கம்பீரமாக நடக்கிறார், வாழ்க அவர் கொற்றம்!

சுயமரியாதைக்காரர்களாகிய நாம் சென்ற முப்பதாண்டுகளாகவே கூறி வருகிறோம் கோயில்கள் மக்கள் நன்மைக்காகப் பயன்படவேண்டும், இல்லையேல் அவை இடித்துத் தரைமட்டமாக்கப்பட வேண்டும் என்று! கோயில்கள் பூஞ்சோலைகளாக மாறவேண்டும், பள்ளிக்கூடங்களாக ஆகவேண்டும், தொழிற்சாலைகளாக உருவாக வேண்டும், மக்கள் மறுமலர்ச்சி நிலையங்களாக இருக்கவேண்டும்— கல்லுப் பிள்ளையார்களின் இருட்டுக் கொட்டடியாக இருந்தால் போதாது என்று நாம் சொல்லாத மேடை கிடையாது. எழுதாத பத்திரிகை கிடையாது, பேசாத நாளும் இருந்ததில்லை. இப்படி நாம் ஊருக்கு அஞ்சாது உண்மையை உரைத்தபோது நம்மீது கல் வீசிய கரங்களும் நம்மை எதிர்த்தெழுந்த ஆவேசப் புயலும் கொஞ்சமல்ல. நம்மை எப்படி அடித்து மடக்கி ஒழித்துக் கட்டுவது என்பதிலேயே முழு மூச்சாக ஈடுபட்டிருந்தனர் மடாதிபதிகளும் மத மதோன்மத்தர்களும் அந்தக் காலத்தில்! நம்முடைய பிரசாரம் அவ்வளவு ஆத்திரத்தை, எதிர்ப்பை, பொச்சரிப்பை, மக்கள் மன்றத்திலே விளைத்தது. ஆனால் இன்று......! ஒரு காங்கிரஸ் அமைச்சர் தோழர் ஷெட்டி ஒரு நகர சபையிலே, மலர் மாலைகள் தன் கழுத்தை முத்தமிடும் வேளையில், அனாயாசமாகக் கூறுகிறார் ஜனங்களின் நன்மைக்காக இல்லாத கோயில்களை ஒழித்தே தீரவேண்டும் என்று! நம் புரட்சித்தொண்டு எவ்வளவு பலன் கொடுத்திருக்கிறது! அதுவும் எவ்வளவு எதிர்ப்புக்கிடையில்! இந்த அற்புதமான வெற்றியை ஒரு முப்பதாண்டுக் காலத்தில் தன்மான இயக்கம் அடைந்திருக்கிறது என்றால் அதன் கொள்கைச் சிறப்பையும் தொண்டின் திறத்தையும் என்னென்று புகழ்வது!

சென்னை நலத்துறை அமைச்சர் ஷெட்டி அவர்கள் 14—11—48ல் திருநெல்வேலி நகர சபைக்குச் சென்றார், சென்றவிடத்திலே வரவேற்பிதழ் வாசித்தளிக்கப்பட்டது அவருக்கு, வாசித்தளிக்கப்பட்ட வரவேற்புத் தாளிலே அந்த ஊரில் இருக்கும் ஒரு பெரிய கோயிலுக்குச் சொந்தமான ஒரு இடத்தை பூம்பொழில் ஒன்று அமைப்பதற்காகக் கொடுக்கும்படி நகரசபை, கோயில் அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டதாகவும், அதற்கு அதிகாரிகள் மறுத்துவிட்டதாகவும் குறிப்பிட்டிருந்தது, அந்தக் குறிப்புக்குப் பதில் கூறுகையில்தான் அமைச்சர் ஷெட்டி அழகுற மொழிந்திருக்கிறார், **"கோயில்கள் மக்களின் நன்மைக்காகவேதான் இருக்கின்றனவே தவிர கடவுள்களுக்காக அல்ல. கடவுளுக்குக் கோயில் தேவை இல்லை. மக்களுக்குத்தான் தேவை. எனவே மக்களின் நன்மைக்கு உதவாத கோயிலை ஒழித்துவிடுங்கள்"** என்று! சென்னை காங்கிரஸ் ஏடு தினசரி, **"ஜனங்களின் நன்மைக்காக இல்லாத கோயில் வேண்டாம்!"** என்று முந்திரிப்பருப்பு அளவுள்ள எழுத்திலே வெளியிட்டிருக்கிறது இந்தச் சேதியை.

கோயிலுக்குச் சொந்தமான இடம் ஆண்டவன் பேராலே வீணாக முடங்கிக் கிடப்பதில் பயனில்லை, அது மக்களுக்குப் பயன்படவேண்டும், பூஞ்சோலை தோன்றுவதற்குரிய இடமாக ஆகவேண்டும் என நகரசபை எண்ணுகிறது, கோயில் அதிகாரிகள் அந்த எண்ணத்திற்கு ஒப்புக் கொள்ளாதபோது, அவர்களின் மதியீனச் செயலை மந்திரிமார்களுக்குத் தெரிவித்து மேலால் நடவடிக்கையெடுப்பது அத்தியாவசியம் என்றும் நகரசபை கருதுகிறது, "நகரசபை கருதுவது மெத்தச் சரி — மக்களுக்கில்லாத கோயில் மகேஸ்வரனுக்குத் தேவையில்லை—ஒழித்துக் கட்டுங்கள் ஊர் மக்கட்கில்லாத அக் கோயிலை" என்று தைரியமாகப் பேசுகிறார் அமைச்சர், அதை ஒரு "தினசரி" இரண்டு பத்தி தலைப்பிட்டு கம்பீரமாக வெளியிடுகிறது! இது, இன்று! ஆனால் 30 ஆண்டுகளுக்கு முன்பாக இருந்தால் கோயிலுக்குச் சொந்தமான இடத்தை ஊர் நன்மைக்காக கேட்பது நியாயம் என்று நகரசபைதான் நினைக்குமா, நினைத்தாலும் மந்திரிதான் அதை ஆதரித்துப் பேசுவாரா, பேசினாலும் ஒரு பத்திரிகைதான் அதைப் போடுமா? அது மாபாதகம் என்றல்லவா நகரசபை! அமைச்சர், பத்திரிகாசிரியர் அனைவரும் எண்ணியிருப்பர்? இவ்வளவுக்கும் திருநெல்வேலி நகரசபை ஒன்றும் சூனாமானாக்களின் ஆதிக்கத்திலே இருப்பதல்ல, காங்கிரஸ்தான் அங்கு மெஜாரிட்டி! தோழர் ஷெட்டியும் திராவிடர் கழகமல்ல, தினசரி பத்திரிகையும் நம்முடைய ஏடு அல்ல. எல்லாம் காங்கிரஸ்! என்றாலும் நம் நாதம் ஒலிக்கிறது அங்கெல்லாம்! இது எதைக் காட்டுகிறது, சுயமரியாதை இயக்கம் மகத்தான வெற்றி பெற்றிருக்கிறது என்பதைத்தானே!

ஈரோட்டுப் பாதையில், இன்று, தோழர் ஷெட்டி—காங்கிரஸ் அமைச்சர், காணப்படுகிறார்! சில பல ஆண்டுகளுக்கு முன்பு யாராவது எண்ணியிருக்கமுடியுமா இந்நிலை ஏற்படும் என்று! ஆனால் இன்று காண்கிறோம் இந்த அற்புதமான காட்சியை! இந்த அற்புதம் அற்புதமாகவே இருந்துவிடாது இனியும்! இது சர்வ சாதாரண காட்சியாக விரைவில் மாறிவிடும் என்பதற்கான அறிகுறிகள் ஏராளமாகத் தென்படுகின்றன! ஷெட்டிகள் இன்று சிலர்! ஆனால் சிலர், பலராகிக் கொண்டிருக்கின்றனர்! நாட்டு மக்கள் எல்லோருமே ஷெட்டிகளாகும் காலமும் தொலைவில் இல்லை!

ஷெட்டியின் இந்தப் பேச்சினை பெரியாரின் பெருந்தொண்டுக்குக் கிடைத்த அரியதோர் பாராட்டு என்போம் நாம். பெரியார், அண்மையில் 70-ம் ஆண்டினை எய்திய

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

காதலிப்பதாக உரைத்து, உல்லாசத்திற்காக என்னைப் பயன்படுத்திக்கொண்டு கடைசியில் துரோகம் செய்துவிட்டாள்! வேணியும் குமுதமாகிவிட்டால்? நானென்னுவது?......சேச்சே! வேணி ஒரு நாளும் அப்படியாகமாட்டாள்!... ஏன் ஆகமாட்டாள், குமார்?...... மனமே! காரணம் கூற எனக்குத் தெரியாது! கோபால் களங்கமற்ற மாணிக்கம்! அவன் தங்கை வேணியும் அப்படித்தானே இருக்கவேண்டும்?....." இப்படி குமாரின் மனதில் காதற் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் பூர்ணலிங்கம் அங்கு வந்தார்.

குமாரும் கோபாலும் அவருக்கு வணக்கம் செய்தார்கள்.

"குமார்! ஒரு புது செய்தி! சொன்னால் ஆச்சரியப்படமாட்டீர்களே? இன்று கோட்டீஸ்வரய்யர் கைது செய்யப்பட்டிருக்கிறார். அவர்தான் உண்மையில் கொலை செய்தவர்......"

"அவரா கொலை செய்தார்? எப்படி?"

"குமார்! விசாரணை விரைவில் நடைபெறப் போகிறது! அப்பொழுது அதன் விவரத்தை நீங்கள் அறிந்துகொள்வீர்கள். நிச்சயம் உங்களுக்கு விடுதலை! பயமே இனி வேண்டாம்! நான் வருகிறேன்." என்று கூறிவிட்டு பூர்ணலிங்கம் வெளியே சென்றார்.

இருவரின் உள்ளங்களும் மகிழ்ச்சியினால் துள்ளித் துள்ளிக் குதித்தன! தன் தொண்டால் முன்னேற்றமும் மகிழ்ச்சியும் அடையப்போகும் ஆதரவற்ற ஏழையப்பரின் கூட்டம் கோபாலின் மனக்கண்முன் வந்து நின்றது! தன் அணைப்பாலும் தித்திக்கும் முத்தங்களாலும் உடலும் உள்ளமும் பூரிக்கப்போகும் களிப்பின் களஞ்சியமான வேணி, குமாரின் எதிரில் நின்று தென்றல் விலக்கிய ஆடையைச் சரி செய்து கொண்டு புன்னகை புரிந்தாள்!

...ன்று பலர் அவரைப் பாராட்டிப் பேசினர், பெரியார் பாராட்டு விழா நாடெங்கும் நடைபெற்றது. ஆனால் எவர் பாராட்டையும் விட மிக மேன்மையானது, சிறந்தது, எவரும் மறக்கமுடியாதது இந்தப் பாராட்டு!

இருபத்திரண்டாவது பகுதி

புலி சீறல்!

குமுதம் கைப்பெண்ணான மூன்று மாதங்களுக்குப் பிறகு ஒரு நாள் மாலை தன் அறையிலிருந்த கட்டிலில் உட்கார்ந்துகொண்டிருந்தாள். மாலைக் கதிரவனின் பொன்நிற கதிர்கள் திறந்த பலகணியின் வழியாக உள்ளே வந்து மங்கையின் பொன்னுடலின் மினுமினுப்பை அதிகரிக்கச் செய்தன. அவள் கண்கள் கலங்கி இருந்தன. எழுந்து சுவற்றில் மாட்டப்பட்டிருந்த கண்ணாடியைக் கையில் எடுத்தாள். தன் முகத்தை அதில் பார்த்தவண்ணம் உணர்ச்சியற்ற மரம்போல் சிறிது நேரம் நின்றிருந்தாள். கீகீ...கீகீ...என்று கத்திக்கொண்டு ஒரு கிளி பறந்து வந்து பலகணியின் கதவின்மேல் உட்கார்ந்தது. கண்ணாடியில் பதிந்திருந்த தன் விழிகளை, கிளியின் பக்கம் செலுத்தினாள். உற்று உற்றுப் பார்த்தாள் அந்தக் கிளியின் அழகை! பளபளப்பான கன்னத்தில் முத்து முத்தாக கண்ணீர் ஒன்றன்பின் ஒன்றாக உருண்டோடியது. கோவெனக் கதறி அழ வேண்டும்போல் அவளுக்குத் தோன்றியது. அழுகையை அடக்கிக்கொண்டு சுற்றுமுற்றும் பார்த்தாள். தான் செய்யப்போவதை எண்ணியதும் பாவையின் முகத்தில் பயம் வந்து கப்பியது! ஏதோ ஒரு பெரிய அநீதியை — அடாத செயலை — செய்யப்போவதாக அவள் இதயம் வேகமாக அடித்துக்கொண்டது. அவள் கண்கள் மிரண்டு மிரண்டு விழித்தன! மெதுவாக நடந்து அலமாரியின் அருகில் சென்றாள். கையைத் தூக்கி அலமாரியில் வைத்ததும், அது நடுநடுங்கியது! ஒரு சிறிய வெள்ளி சிமிழியை எடுத்ததும், அவள் உள்ளத்தில் ஒரு பெரிய பாராங்கல்லைத் தூக்கிவைத்தது போல இருந்தது. சிமிழியை உள்ளங்கையில் அடக்கிக்கொண்டு, பலகணியின் அருகில் சென்றாள். உட்கார்ந்துகொண்டிருந்த கிளி பறந்தோடியது! சிமிழியைத் திறந்தாள். அவள் கண்களில் நீர் நிறைந்துவிட்டதினால் அதனுள் இருந்தது அவள் கண்களுக்குத் தெரியவே இல்லை.

விழிகளைத் துடைத்துக்கொண்டு, விசாலமாகத் திறந்து சிமிழியினுள் பார்த்தாள். அதனுள் இருந்த குங்குமம் அவளைப் பார்த்து ஏளனச் சிரிப்பு சிரித்தது! வேகமாகச் சென்று அறையின் கதவைத் தாளிட்டுவிட்டு, கண்ணாடியை எடுத்தாள். அவிழ்ந்திருந்த கூந்தலைச் சுற்றி முடித்துக்கொண்டாள்! வழிந்திருந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள்! பொங்கிக்கொண்டுவந்த அழுகையை அடக்கிக்கொண்டு, பயந்த உள்ளத்திற்குத் தைரியம் ஏற்றிக்கொண்டாள். பாண்டிய மன்னனின் முன்பு கண்ணகி நின்றதைப்போல உறுதி நிறைந்த மனத்தோடு மங்கை நின்றாள்!

சிமிழியைப் பலகணியின் மேல் வைத்துவிட்டு, கண்ணாடியை எடுத்து தன்முகத்தைப் பார்த்தாள். விரல்களால் சிறிது குங்குமம் எடுத்து நெற்றியில் வைத்தாள்! குங்குமமிட்ட முகத்தைக் கண்ணாடியில் பார்த்ததும் அவள் உள்ளத்தில் மகிழ்ச்சிக் கடல் பொங்கியது! அவள் அடைந்த களிப்பிற்கு எல்லையே இல்லை. மிக உயர்ந்த மலையின் உச்சியில் நின்றுகொண்டிருந்தவள், திடீரென்று மலையின் அருகிலிருந்த கிணற்றின் அடியில் இருக்கக் கண்டால், அவன் உள்ளத்தில் எந்தவிதமான உணர்ச்சி ஏற்படும்? அதே போன்ற உணர்ச்சி ஏற்பட்டது, கண்ணாடியில் காணும் இக்காட்சி கானல் நீர் போன்றது என்ற உண்மை அவள் நினைவிற்கு வந்ததும்! ஆத்திரமும் அழுகையும் பீறிட்டுக்கொண்டு வந்தது! அவள்கண்கள் பார்வை அற்றுவிட்டன, குபுகுபுவென சுரந்த கண்ணீர் அருவியினால்! குங்கும சிமிழியை எறிந்தாள்! கண்ணாடி கைநழுவி கீழே விழுந்தது! அசைவற்று சிறிது நேரம் நின்றிருந்தாள்.

பிறகு கதவைத்திறந்து கொண்டு அறையை விட்டுவெளியே செல்ல காலடி எடுத்துவைத்தாள். உடனே தன் உயிருக்குச் சமமான தாலி நினைவிற்குவர உள்ளே வந்து அதனை எடுத்துக்கொண்டு, தோட்டத்திற்கு வேகமாக நடந்தாள்.

(10-ம் பக்கம் பார்க்க)

குதிரைப் பந்தயம் நடக்கிறது

கிண்டி குதிரைப் பந்தயம் நவம்பர் 20 முதல் சென்னையில் ஜாம் ஜாமென நடந்துகொண்டிருக்கிறது, சென்னை சர்க்கார் இதைத் தடுக்க முயற்சி எடுத்துக் கொண்டதாகவே தெரியவில்லை. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே பந்தய ஒழிப்பு முயற்சியை ஆரம்பித்து விட்டோம் என்று அறிவித்தார்கள், இன்னமும் முயற்சிதான் நடந்துகொண்டிருக்கிறது — பந்தயம் ஒழிந்தபாடில்லை, ஏழைகளின் துயரும் தீர்ந்தபாடு இல்லை! குதிரைப் பந்தயம் போன்ற சூதாட்டங்கள் நாட்டிலே நடைபெறக் கூடாது என்பதை எவரும் மறுத்துப் பேசத் துணியமாட்டார்கள், குதிரைப் பந்தயம் ஒழியவேண்டியதே நியாயம். மது, மக்கள் மதியை எவ்வளவு மயக்கிறதோ அதைவிட அதிகமாகவே மயக்கி, மது மக்கள் பணத்தை எவ்வளவு சுரண்டிற்றோ அதைவிட ஆயிரம் பதினாயிரம் இலட்சம் மடங்கு மக்களிடமிருந்து பணத்தை பறித்து அவர்களை ஓட்டாண்டியாக்கி வாழ்க்கைப் பூந்தோட்டத்திலிருந்து வறுமைப் பாலை வனத்திற்கு அதில் ஈடுபடுபவர்களைத் துரத்தியடிக்கும் தன்மையது குதிரைப் பந்தய சூதாட்டம். இந்தப் பந்தயக் கொடுமையாலே சிதைந்த குடும்பங்கள் ஏராளம்: சீரழிந்த மக்கள் எண்ணற்றவர்கள். மக்களின் அறிவு, பணம், உழைப்பு, நேரம், வாழ்க்கை இவ்வளவையும் ஒரே சமயத்தில் பாழாக்கும் ஒரே ஒரே சாதனம் இந்த குதிரைப் பந்தயம். நாகரிகமுள்ள எந்த சர்க்காரும் இந்த அநாகரிக காட்டுமிராண்டு வழக்கத்தை அனுமதித்துக் கொண்டிருக்கக்கூடாது. என்றாலும் சென்னை சர்க்கார் பந்தயத்தை அனுமதிக்கிறார்கள், தடை விதிக்க மறுக்கிறார்கள், ஏன் என்றுதான் நமக்குத் தெரியவில்லை! ஒருக்கால் இந்தப் பந்தய ஒழிப்புக்கும் திராவிடக் கழகத்தார் ஏதேனும் அறப்போர் தொடங்கட்டும். அதன் பின் பந்தயத்தை நிறுத்துவோம் என்று எண்ணுகிறார்கள் போலிருக்கிறது நம் அமைச்சர்கள்!

—

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கலைப்பதற்கு ஒரு சட்டம் இல்லையா இந்த நாட்டிலே? உண்மை உரைப்பவரை ஒடுக்க சட்டம் இருக்கிறதே, நியாயம் புகல்பவரை சிறைக்குள் அடைக்க சட்டம் இருக்கிறதே, நீதி போதிப்பவரை ஜாமீன் கேட்க சட்டம் இருக்கிறதே, பாட்டாளிகட்குப் பரிந்து பேசும் **விடுதலை**க்கு ரூ 2000 தண்டம் விதிக்க சட்டம் இருக்கிறதே, இன்னிசை முழக்கும் கவிதைச் சுவடி "குயில்" தனை ஒடுக்க சட்டம் இருக்கிறதே, ஆரியர் மறைத்த அரிய உண்மைகளை அழகிய இலக்கிய வட்டிலில் வைத்துத் தந்த **இராவண காவியத்தை** மறைக்க சட்டம் இறக்கிறதே, பொது வாழ்க்கையின் புனிதத் தன்மையைக் கெடுக்கும் இந்தத் தேச பக்தர்களின் தகாச் செயலைத் தடுப்பதற்குத்தானா சட்டமில்லை இந்த நாட்டிலே? **"பர்மிட் வாங்குவதற்கோ லைசென்ஸ் வாங்குவதற்கோ கதர் ஜிப்பாக்களைப் போட்டுக் கொண்டு செக்ரிடேரியட்டைச் சுற்றி வட்டமிடும் கோஷ்டியினருக்கு"** [பாரத தேவி 17-11-48 கடற்காற்று] மட்டும் சட்டம் கிடையாதா, சட்டம் அவர்களைத் தீண்டாதா, தீண்டினால் சட்டம் சுக்கல் நூறாகிப் போகுமா, என்ன காரணம் இவர்களுடைய "லிமிடெட் கம்பெனி வியாபாரம்" ஊர் அறிந்த விஷயமாகியுங்கூட சர்க்காரால் அது தடுக்கப்படாமல் இருப்பதற்கு? சொந்த கட்சியினராயிற்றே, எப்படி அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பது என்ற பாசமா? அப்படியானால் "சொந்தக் கட்சியினர்" எது வேண்டுமானாலும் செய்யலாம் என்று அர்த்தமா? **சட்ட சபை உறுப்பினர்** பதவி என்றால் அதற்கொரு நாணயம், பொறுப்பு, கௌரவம், ஒழுங்கு, பண்பு, வேண்டாமா? **"நாம் இப்படி பச்சையாகச் சொல்வது பலருக்குக் கோபமாக இருக்கலாம். தியாகிகளை இப்படிக் கேவலமாகப் பேசலாமா என்று ஆத்திரப்படலாம். ஆனால் நம்மீது கோபப்பட்டு பிரயோஜனமில்லை...... இது ஊர் அறிந்த விஷயம்"** என்று பார்ப்பன ஏடு பாரத தேவியே கூறுகிறதே, இது கண்டு ஆளவந்தார்கள் துடிக்க வேண்டாமா? ஆனால் துடிக்கவில்லையே, ஏன்? நாம் கேட்கிறோம், ஏன் சர்க்கார் கட்சி உறுப்பினர்களின் இந்த ஊழல் போக்கை இந்த சர்க்கார் இன்றுவரை தடுக்கவில்லை?

தேசபக்தர்கள் துவக்கிய லிமிடெட் கம்பெனி! அதைக் கலைக்க வழி கிடையாதா இந்த நாட்டிலே? கிடையாதா?

—

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

சோலையில், பலவர்ணங்களில் பூத்திருந்த மலர்கள் கைம்பெண் குமுதத்தைப்பார்த்துச் சிரித்தன! அவைகள் செய்த ஏளனத்தை அவள் பொருட்படுத்தாது, ஒரு சிறிய மேடையின் மீது அமர்ந்தாள். பாரதிதாசன் கவிதைகளைத் திறந்தாள்! அதிலிருந்த தேன் கவிதைகளின் மீது விழிவண்டுகள் மொய்த்தன! அவள் கற்கண்டு இதழ்கள் அசைந்து, ஒருபாடலுக்கு உயிரளித்தன! காற்றில் அக் கீதம் மிதந்து சென்றது!

காதல் சுரக்கின்ற
நெஞ்சத்திலே கெட்ட
கைம்மையைத் தூக்கா
தீர்—ஒரு
கட்டழகன் திருத்தோளினைச்
சேர்ந்திடச்
சாத்திரம் பார்க்கா தீர்!

இந்த வரிகளையே அவள் திரும்பத்திரும்ப முணுமுணுத்தாள்.

"குமுதம்! குமுதம்" என்று உரக்கக் கூப்பிட்டுக்கொண்டே வையாபுரி வேகமாகத் தோட்டத்தினுள் வந்தார். அவர் வந்த வேகத்தையும் அவர் முகம் மலர்ந்திருந்த விதத்தையும் கண்டு குமுதம் ஆச்சரியமடைந்தாள். எழுந்து "என்னப்பா!" என்று கேட்டுக் கொண்டே அவரை நோக்கி அவளும் நடந்தாள்.

"அம்மா!" என்று மகிழ்ச்சியோடு கிழவர் கூறி, தன் கண்களைத் துடைத்துக்கொண்டார்.

"செய்தி என்ன அப்பா?" என்று குமுதம் ஆச்சரியமும் கொஞ்சுதலும் நிறைந்த குரலில் கேட்டாள்.

"எப்படி அம்மா சொல்வேன்! உனக்கிருப்பதோ ஒரே ஒரு இதயம்! இந்தக் களிப்பைத் தாங்க கோடானுகோடி இதயங்கள் வேண்டுமே அம்மா!"

(4-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மலர் 6

அடா ஆச்சர்யமே! காங்கிரசும் சோஷலிசத்தை விரும்புகிறதாமே!

ஸ்வராஜ்யம் வந்துவிட்டால் ஏழை எளியவர்களின் நிலைமை உயர்ந்துவிடும் என்பதெல்லாம் வெறும் கனவாய்விட்டது. விடுதலைப் போராட்ட காலத்தில் இருந்த உற்சாகமெல்லாம் இப்போது சுயநலத்தில் மாறிவிட்டது. கிராமங்களில் உள்ள ஏழைகள் ஸ்வராஜ்யம் வந்ததினால் ஒரு நன்மையையும் அனுபவிக்கவில்லை. அவர்களுடைய வாழ்க்கை அன்று இருந்ததைப்போலவே இன்றும் கசப்பாய்த்தானிருக்கிறது. பிரிட்டிஷ் சாமராஜ்யத்தை வீரத்துடன் எதிர்த்து நின்றவர்கள் இன்று முதலாளித்துவ சாம்ராஜ்யத்தைக் கண்டு நடுங்குகிறார்கள். இந்த நிலைமையில் காங்கிரஸ்காரர்களும் சோஷலிஸத்தை விரும்புகிறார்கள் என்று பேசுவது சிரிப்பாய்த்தானிருக்கிறது.

—மறுபடியும் பாரத தேவிச் செடியிலிருந்து!

மலர் 7

ஊக்கமில்லை, உற்சாகமில்லை, திறமையுமில்லை மந்திரிகட்கு!

இந்தியாவில் இன்றைய தினம் பற்றாக்குறை இருப்பதற்கு முக்கிய காரணமாயிருப்பது சென்னை மாகாணம்.

மற்ற மாகாணங்களில் இவ்வளவு கேவலமான நிலைமை இல்லை. இப்படி 'லபோ லபோ' என்று பிற மாகாணங்கள் அடித்துக் கொள்வதுமில்லை. சென்னைக்குக் கொஞ்சம் கொடுக்கவும் மற்ற மாகாணங்கள் தயாராயிருக்கின்றன.

ஆகவே, பற்றாக் குறையைப் போக்குவதற்கும் உணவுக் கண்ட்ரோலின் அவசியம் இல்லாமற் செய்வதற்கும் முக்கியமான பிரயத்தனம் சென்னை மாகாணத்திலேதான் நடைபெற வேண்டும்.

நமது மாகாண மந்திரிகள், சட்டசபை அங்கத்தினர்கள், உத்தியோகஸ்தர்கள் முதலியோரால் அத்தகைய பிரயத்தனத்தை இதுகாறும் வெற்றிபெற நடத்த முடியவில்லை யென்பது கண் கூடு.

அதற்கு வேண்டிய ஊக்கமோ, உற்சாகமோ, திறமையோ அவர்களிடம் இல்லையென்பது பிரத்யட்சம்.

நமது மந்திரிமார்கள் முதலியோர் அத்தகைய ஊக்கமும் உற்சாகமும் திறமையும் பெறும் வரையில் இம்மாகாண மக்கள் கஷ்டப்பட்டே யாகவேண்டும்; உணவுக் கண்ட்ரோலினால் ஏற்படும் அல்லல்களை அனுபவித்தே தொலைக்க வேண்டும்.

—"கல்கி"யிலிருந்து!

மலர் 8

பொதுமக்கள் சந்தேகிக்கிறார்கள்!

இந்திய அரசாங்கத்தில் உள்ள ஒரு மந்திரி முதலாளித்துவம் ஒழியாது என்கிறார். மற்றோர் மந்திரி இன்னும் 10 ஆண்டுகளில் முதலாளித்துவம் ஒழியும் என்கிறார். பிறிதோர் மந்திரி பஞ்சாயத்து முறைதான் இந்தியாவின் வீழ்ச்சிக்குக் காரணமென்கிறார், இன்னுமொரு மந்திரி பஞ்சாயத்து முறையேதான் இந்தியாவின் சிறப்பை எடுத்துக் காட்டுவது என்கிறார். இவற்றை யெல்லாம் கண்டும், கேட்டும் ஒன்றும் அறியாதவர் போல் மௌனம் சாதிக்கிறார் பிறிதொரு மந்திரி. அரசாங்க மந்திரிகளுக்கிடையே இவ்வளவு தெளிவின்மையிருக்கும்போது நாட்டு நலத்துக்கான திட்டங்களை இவர்கள் எப்படி நிறைவேற்றப் போகிறார்களோ என்று பொது மக்கள் சந்தேகப் படுவது இயல்பன்றோ!

—"பிரசண்ட விகட"னிலிருந்து!

மலர் 9

சித்ரபுத்திரன் கணக்கு விரட்டிக்கொண்டு வருகிறது!

புதுத் தேர்தல்கள் வரும் வரையில் காங்கிரஸ்காரர்கள் ஏகபோகமாக எல்லாவற்றையும் அனுபவித்துக் கொண்டிருக்கலாம். ஆனால், தேர்தல் தினத்தன்று சித்ரகுப்தனின் கணக்கு அவர்களை விரட்டிக்கொண்டு வரும். தேசத்திற்கு விடுதலை சம்பாதித்துக் கொடுத்த ஒரு பிரம்மாண்டமான ஸ்தாபனம் இன்று கழுதை தேய்ந்து கட்டெறும்பாயிருப்பது வருந்தத்தக்கது தான். ஆனால் ஸ்தாபனத்தைவிட தேச நலன் முக்கியம்; தேச நலனைவிட அதிலுள்ள ஜனங்களின் நலன் முக்கியம்.

—"பாரத தேவி"யிலிருந்து!

* * *

ஆளவந்தார்களே, மாலை எப்படி இருக்கிறது? கழுத்து நுழைகிறதா? மலர்களின் நிறமும் அழகும் உங்கட்குப் பிடிக்கின்றனவா? நேரில் சொல்ல மனமில்லாவிட்டாலும் உங்கள் தூதுவர்களான சி. ஐ. டி. க்கள் மூலம் சொல்லி அனுப்புங்கள். ஆனால் "விடுதலை"க்குக் கொடுத்தது போல 2000 ரூ ஜாமீன் என்ற பரிசைமட்டும் அளித்துவிடாதீர்கள்! அவ்வளவு பாராட்டு எங்களுக்கு வேண்டாம்! எங்களை நீங்கள் மறந்துவிட்டால்கூட நல்லதுதான்! ஆனால் யாம் தொடுத்துள்ள இந்த மாலையை மட்டும் மறந்துவிடாதீர்கள்!

தொடர்கதை :

[முன்பு: இன்ஸ்பெக்டர் பூர்ணலிங்கம் பழுத்தூர் காளிமுத்துவை கைது செய்து அழைத்துப்போகிறார். வழியில் ஓர் இடத்தில் காளிமுத்து கொலை நிகழ்ச்சியின் முழு உண்மைகளை விளக்கமாகக் கூறுகிறான். அவன் வாய்மொழிமூலம் கோடீஸ்வரய்யர் செய்த சதி முழுதும் வெளியாகிறது......]

"குமார் நல்ல கலைஞன். கோபால் ஏழைகளுக்காக உழைத்தவன். அவர்களிருவரும் பத்தரை மாற்று சுயமரியாதைக்காரர்கள். அவர்கள் சிறையில் வாடுவது கண்ணனுக்கு வருத்தத்தை அளித்துவந்தது. அய்யர் தம்மால் அவர்களை விடுவிக்க முடியும் என்று ஆசைகாட்டினாராம்! அதன்படியே, நான்தான் கொலைசெய்தவன் என்று அதிகாரிகளிடம் அய்யர் என்னைப்பற்றிக் கூறியிருக்க வேண்டும்......"

"ஆமாம்! என்னிடமும் அவர்தான் கூறினார்!"

"பார்த்தீங்களா! ஆரியனின் சூழ்ச்சியை! அதற்கு முன்னேற்பாடாக, எனக்கும் தனக்கும் விரோதமென்றும் நான் அவரை அடிப்பதாகவும் கொலை செய்துவிடுவதாக பயமுறுத்துவதாகவும் போலீஸாருக்கு முறையிட்டுக்கொண்டு வந்தார், அப்பொழுது நினைத்தேன், சுயமரியாதைக்காரனாக நான் மாறிவிட்டதினால் கோபம் கொண்டு இப்படியெல்லாம் எனக்குத் தொல்லைகள் தருகிறார் என்று. என்னை இந்தக் கதிக்குக் கொண்டுவர அது பார்ப்பனனின் முன்னேற்பாடு என்று இப்பொழுதுதான் எனக்குப் புரிகிறது. இனி நான் அய்யர் தான் கொலை செய்தார் என்று உண்மையை உரைத்தால், "இவனுக்கும் எனக்கும் நீண்ட நாட்களாக விரோதம். அதற்கு ஆதாரம் பல நாட்களாக போலீஸாரிடம் முறையிட்டுக்கொண்ட தஸ்தாவேஜுகள் இதோ பாருங்கள்! அந்த விரோதத்தின் பேரில்தான் வீணாக என்மேல் இவன் இந்தப் பழியைச் சுமத்துகிறான்" என்று கூறி, உண்மையைப் பொய்யாக்கி, தன்னைத் தப்பித்துக்கொள்ள வழி தேடிவைத்துக்கொண்டிருக்கிறார். தாங்களும் அய்யர் கூறுவதை, ஆதார பூர்வமாக யிருப்பதால் நம்புவீர்கள், அல்லவா?" என்று கூறி நீர் நிறைந்த கண்களோடு இன்ஸ்பெக்டரைக் காளிமுத்து பார்த்தான்.

கேட்டுக்கொண்டே, யோசித்து வந்த பூர்ணலிங்கம், "அப்படியொன்றுமில்லை. எவ்வளவோ ஆதரவற்றவர்களை நான் காப்பாற்றி இருக்கிறேன்......... அது இருக்கட்டும் அய்யர்தான் கொலை செய்தார் என்பதற்கு இப்பொழுது ஏதாகிலும் ஆதாரமிருக்கிறதா?" என்று கேட்டார்.

"இருக்கிறது! ஜமீன்தாரிடமிருந்து வாங்கி வந்த நகைகளும், அவரைக் கொலைசெய்த கத்தியும் இப்பொழுதும் அவரிடம் தான் இருக்கின்றன!"

"கத்தியையுமா வைத்திருக்கிறார்?"

"நகைகளை மட்டும் வீட்டில் வைத்திருக்கிறார்! கத்தியை கொலை நடந்த அன்றே அவர் தோட்டத்துக் கிணற்றில் போட்டுவிட்டார், அனேகமாக கத்தி கிணற்றில்தான் இருக்கும். தேடினால் கிடைக்கும்..."

"சரி! இரு சுயமரியாதைக்காரர்கள் சிறையில் சிக்கி ஆதரவற்று தவிப்பதைக் கண்டு, நீ ஏன் ஒரு சுயமரியாதைக்காரனாகயிருந்தும் — உண்மையை இவ்வளவு நாட்களாகக் கூறாமல் மறைத்து வைத்திருந்தாய்?"

"உண்மையைக் கூறினால், கொலைக்கு உடந்தையாக இருந்தோம் என்ற குற்றத்திற்கு எங்கே ஆளாகி தண்டனை பெற்றுவிடுவோமோ என்ற பயத்தினால்தான் கூறாமல் இருந்துவிட்டேன்" என்று கூறி கோவெனக் கதறி அழுதான்.

"புறப்படு! பிறகு இது சம்பந்தமாக யோசிக்கிறேன்!" என்று கூறி பூர்ணலிங்கம் எழுந்தார். வண்டியில் இருவரும் ஏறிக்கொண்டார்கள். வண்டி சிறிது வேகமாகவே சென்று, குமாரும் கோபாலும் சிறைப்பட்டுக் கிடக்கும் சிங்கார நகரத்தைப் போய்ச் சேர்ந்தது!

இருபது நாட்கள் சென்றன. சிறையில் குமார் கம்பிகளைப் பிடித்துக்கொண்டு நின்றுகொண்டிருந்தான். ஒரு மூலையில் கோபால் உட்கார்ந்திருந்தான். விடுதலை அடைவது நிச்சயம் என்ற நம்பிக்கையில் இருவரின் முகமும் அமைதி நிறைந்ததாகக் காணப்பட்டது. எதிர்காலத்தில் ஏழைகளுக்காக எப்படி எப்படி தொண்டாற்றினால், அவர்களின் வாழ்க்கையை உயர்த்த முடியுமென்று கோபால் யோசித்துக்கொண்டிருந்தான்.

கலைஞன் குமார் காதல் துறை ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தான், "வேணியின் நினைவு அடிக்கடி வருகிறதே.........ஏன்? கனவில் அவளும் நானும்......அது ஏன்? உண்மையிலேயே என் மனதை என்னையும் அறியாது வேணி கொள்ளை கொண்டுவிட்டாளோ?" அவள் காதலை எப்படி நம்புவது? குமுதம்! குமுதமும் உண்மையாகக்

(9-ம் பக்கம் பார்க்க)

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hons)